செ.வெ.எண்: 42 நாள்: 14.02.2017

## பத்திரிகைச் செய்தி

தமிழக அரசு, கால்நடை வளர்ப்போர் நலன் கருதி கால்நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மான்ய விலையில் வழங்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, ஆலங்குடி, கோமாபுரம், அன்னவாசல், விராலிமலை, கீரனூர், காரையூர், ஆவூர், அறந்தாங்கி, நாகுடி, அரிமளம், மணமேல்குடி மற்றும் கரூர் ஆகிய 15 இடங்களில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் தலா ரூ.18.27 லட்சம் செலவில் உலர் தீவன கிடங்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தீவனம் தேவைப்படும் கால்நடை வளர்ப்போர் தங்களது குடும்ப அட்டை நகலுடன் மேற்கண்ட 15 அரசு கால்நடை மருந்தகங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இம்மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ள 15 தீவன கிடங்குகளுக்கும் தனித்தனியாக தரமான உலர்தீவனம் (வைக்கோல்) 21 கிலோ கட்டுகளாக கட்டி, வண்டியில் ஏற்றி மேலே குறிப்பிட்டுள்ள தீவனக்கிடங்கு மையங்களில் இறக்கி அடுக்கி போர் போட்டுத்தரவும், தொடர்ந்து 3 முதல் 4 மாதங்களுக்கு உலர்தீவனம் விநியோகம் செய்திட விருப்பம் தெரிவித்திடும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தினை புதுக்கோட்டை, கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் பெற்று ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு பிணை வைப்புத் தொகையாக ஒவ்வொரு கிடங்கிற்கும் தலா ரூ10,000/- வீதம் மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, புதுக்கோட்டை என்ற பெயரில் எடுக்கப்பட்ட வங்கி காசோலை/ வரைவோலையினை 27.02.2017 மாலை 3.00 மணிக்குள் மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியினை தீவன கிடங்கு மையத்தின் பெயரை வெளி உறையில் குறிப்பிட்டு புதுக்கோட்டை, கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் அளித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி பெட்டியிலோ பதிவு தபால் மூலமாகவோ குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அனுப்பி வைத்திட தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு மண்டல இணை இயக்குநரை **9445001218** என்ற எண்ணிலும் அலுவலக தொலைபேசிக்கு **04322 224427** என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**